
சகோ. ப. சாம் ஜெபத்துரை
காவலாளியோ?

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# காவலாளியோ?

## (AM I A WATCHMAN?)

Mr. A.D.P.
706

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்:

**J. சாம் ஜெபத்துரை**

**50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு**

**கோடம்பாக்கம், சென்னை - 600 024.**

முதற் பதிப்பு : ஜுன் 1990
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 171

அச்சிட்டோர்:-
ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# அர்ப்பணம்

என்னைத் தெரிந்துகொண்டு, கல்வாரி இரத்தத்தினாலே என்னை விலைக்கு வாங்கி, எனக்காக யாவையும் செய்து முடிக்கிற என் அருமை ஆண்டவருக்கே இந்நூலை அர்ப்பணிக்கிறேன். அவருடைய நாமம் மகிமைப்படுவதாக! சகல கனத்தையும் மகிமையையும் என் ராஜாவும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கே செலுத்துகிறேன்!

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | காவலாளியோ? | 5 |
| 2. | ஆத்துமாவுக்கு காவலாளிகள்! | 16 |
| 3. | எண்ணங்களுக்கு காவலாளிகள்! | 23 |
| 4. | கண்களுக்கு காவல்! | 29 |
| 5. | குடும்பத்திற்கு காவலாளி! | 36 |
| 6. | சகோதரருக்கு காவலாளிகள்! | 46 |
| 7. | தேசத்திற்கு காவலாளி! | 65 |

## அத்தியாயம் 1

# காவலாளியோ?

''கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்''
(ஆதி 4:9).

''காவலாளியோ?'' என்ற தலைப்பில் நான் செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகிறேன். இந்த செய்திக்கு நேராய் கடந்துசெல்வதற்கு முன்பு ஒரு நிமிடம் நம்முடைய தலைகளைத் தாழ்த்தி நம்முடைய அருமை ஆண்டவருடைய பொன்முகத்தை நோக்கிப் பார்ப்போம். அவரே நம்முடைய ஆலோசனைக் கர்த்தராய் இருக்கிறார்.

நான் உன்மேல் என் கண்களை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்று அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார் அல்லவா? அவரே நமக்கு ஆலோசனை சொல்லட்டும்;

அவரே நம்முடைய நல்ல போதகராய் இருக்கிறார். அவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிறார். அவருடைய வசனமே நம்முடைய கால்களுக்குத் தீபமும், நமது பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது.

வசனம் பிரசங்கிக்கப்படும்போதுதானே லீதியாளின் உள்ளத்தை கர்த்தர் திறந்ததுபோல நம் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் அவர் திறந்தருள்வாராக!

கர்த்தருடைய வசனத்தை நாம் ஆவலோடு எதிர்பார்ப்போம் அன்றைக்கு கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திலே, பரலோகத்திலிருந்து பொழியப்பட்ட மன்னாவினால் போஷித்தார். அவர்கள் பெலன் கொண்டார்கள். இன்றைக்கு வானத்திலிருந்து இறங்கி வந்த

அப்பமாம், பரலோக மன்னாவாம், இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

தேவனுடைய வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. இன்றைக்கு கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போதுதானே சபைகள் உயிர்ப்பிக்கப்படும்படியாக நாம் ஜெபத்தோடு இருப்போம்

கர்த்தர் தம்முடைய வசனத்தை அனுப்பி குணமாக்குகிறார். வசனத்தை அனுப்பி உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்கிறார். ஆகவே, வசனத்தை நாம் எதிர்பார்ப்போடு கவனிப்போமாக!

அன்று பேதுரு வசனத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது கூடியிருந்த யாவர்மேலும் தேவனுடைய ஆவியானவர் இறங்கினார். தேவ ஆவியானவர் பட்சபாதமுள்ளவர் அல்ல. இன்றைக்கும் வசனத்தை தேவனுடைய ஊழியக்காரனாகிய அடியேன் எடுத்துரைக்கும்போது கர்த்தருடைய ஆவியானவர் உங்கள்மேலும் இறங்குவார்!

நம்முடைய மத்தியிலே வல்லமையான காரியங்களைச் செய்யும்படி கர்த்தர் தாமே நம்முடைய மத்தியில் அசைவாடிக்கொண்டிருக்கிறார். நம்மேல் ஆவியின் வல்லமைகளை கிருபையாக ஊற்றும்படி அவர் விரும்புகிறார்.

நம்முடைய ஜெபவாழ்க்கையை உயிர்ப்பிக்கும்படியாக அவர் விரும்புகிறார். ஆவியிலே அனல் மூட்ட விரும்புகிறார். கர்த்தருடைய சத்தத்துக்கு நேராய் நாம் கடந்து வருவோமா?

ஆதியாகமம் 4-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை மீண்டும் வாசிப்போம்:

''கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்''

(ஆதி 4:9).

நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ?

மனுஷன் தேவனைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான்! மனுஷன் தேவனை எதிர்த்துப் பேசின முதல் சுசப்பின் வார்த்தையும் இதுதான்.

வேதத்தில் அநேக கேள்விகளையும் பதில்களையும் நாம் பார்த்தாலும், காயீனுடைய இந்தக் கேள்வி மிகுந்த துணிகரமானதாய், தேவ பயமற்றதாய் இருக்கிறது.

கர்த்தர் கேட்ட முதல் கேள்வி, ஏதேனிலே மிக அன்போடு, மிக பரிதாபத்தோடு, பெருமூச்சுக்களோடு, ''ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?'' என்பதுதான். அந்த வார்த்தைகள் தேடி வந்த ஆண்டவரின் அன்பின் குரலை வெளிப்படுத்தின.

ஆனால் மனுஷன் கேட்கிற முதல் கேள்வி அவனுடைய பெருமையையும், பொறுப்பற்ற தன்மையையும் வெளிப்படுத்துகிறது அல்லவா? நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ என்று எத்தனை துணிகரமாய் காயீன் கேட்கிறான் பாருங்கள்!

டேக்ஸ் என்று சொல்லப்பட்ட ஒரு சிறந்த வேத பண்டிதர் வேதத்தில் எத்தனை கேள்விகள் இருக்கிறது என்பதைக் குறித்து பல வருடங்கள் ஆராய்ச்சி செய்தார். முடிவிலே பழைய ஏற்பாட்டில் 2272 கேள்விகளும், புதிய ஏற்பாட்டில் 1022 கேள்விகளுமாக மொத்தத்தில் 3294 கேள்விகள் முழு வேதாகமத்திலும் அடங்கியிருக்கின்றன என்று கண்டு பிடித்தார்.

அதிலே, ''நான் காவலாளியோ?'' என்ற கேள்வி நம்மை மிகவும் அதிகமாய் சிந்திக்க வைக்கிறது.

காயீன் துணிகரமாய் தன் தம்பியைக் கொன்றுவிட்டு, அவனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது என்பதை அறியாமல், ''நான் என்

சகோதரனுடைய ஜீவனுக்குக் காவலாளியோ? அவனுடைய ஆத்துமாவுக்கு காவலாளியோ? என்னுடைய சகோதரனைக் குறித்து நீர் என்னிடத்தில் கேட்க வேண்டியது என்ன? அவனுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நான் என் சகோதரனுக்குக் காவலாளி அல்ல" என்று எவ்வளவு துணிகரமாய்ப் பேசுகிறான் என்பதைக் கவனியுங்கள்.

ஆம், காயீன் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு வாழ்ந்தான். காயீனுடைய பலி அங்கீகரிக்கப் படவில்லை என்றவுடனே அவன் தன் சகோதரன்மேல் பொறாமை கொண்டான். அவனுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொலைசெய்தான்.

கொலைசெய்து மண்ணோடு மண்ணாய் மூடிவிட்ட பிறகு அதை ஒருவரும் அறியார் என்று எண்ணியிருந்தான். ஆனால் அவனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டது.

கொலை செய்து ஜீவன் போனாலும், ஜீவன் போனவர்களுடைய வாய்கள் இயங்காமல் போனாலும், மரித்தவர்களால் ஜெபிக்க முடியாமல் போனாலும், அவர்களுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து கூப்பிடும் என்பதை அவன் அறியாமல் போனான்.

இரத்தம் ஒரு மனுஷனுடைய காவலாளி. மாம்சத்தின் உயிர் அதன் இரத்தத்தில் இருக்கிறது என்பதை காயீன் அறியவில்லை.

இன்றைக்கு விஞ்ஞானிகளும் டாக்டர்களும் இரத்தம் ஒரு காவலாளி என்பதையும், அது சத்தமிட்டு பேசக்கூடியது என்பதையும் அறியாமல் இருக்கிறார்கள்.

இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் இருக்கின்றன, வெள்ளை அணுக்கள் இருக்கின்றன. பிளாஸ்மா இருக்கின்றது, புரோட்டோபிளாசம் இருக்கிறது. முன்னோர்

களின் பரம்பரை சுபாவங்கள் இருக்கிறது என்பதையெல் லாம் அறிகிருர்களே தவிர, இரத்தம் ஒரு காவலாளி என்பதையும், இரத்தத்துக்கு சத்தம் உண்டு என்பதையும் அறியாதிருக்கிருர்கள்.

காயீனுக்கு இந்த உண்மை தெரியாததிஞல்தான் என் சகோதரனுக்கு காவலாளியோ என்று கேட்டான். கொஞ்சம்கூட இரத்தபாசம் இல்லே. கொஞ்சம்கூட பொறுப்பு இல்லே.

இன்றைக்கு அநேகம்பேர் இப்படித்தான் சகோதர சகோதரிகளேக் குறித்த பாசம் இல்லாமல், அவர்களுக்கு தாங்கள் செய்யவேண்டிய கடமைகளேக் குறித்து உணராமல், சுயநலமான வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருக்கிருர்கள்.

இன்னும் சிலர் மற்றவர்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன், அது போதும். நான் விசுவாசிகளுடன் கர்த்தரை ஆராதிக்கிறேன், அது போதும். பரலோக ராஜ்யத்திற்கு நான் போய் சேர்ந்துவிடுவேன், அது போதும் என்று எண்ணுகிருர்கள். அவர்கள்:

பாவத்தில் ஜீவிப்பவர்
பாதாளத்தில் அழிந்திடுவார்
நானே பரலோகத்தில்
நானும் பாடல் பாடிடுவேன்

என்று கைத்தட்டி உற்சாகமாய்ப் பாடுகிருர்கள்.

பாவத்தில் ஜீவிப்பவர்கள் பாதாளத்தில் அழிவது அவர்களுக்கு எத்தனே மகிழ்ச்சியாய் இருக்கிறது பாருங்கள்!

இன்று சுயநலமான ஒரு வாழ்க்கையிலே உலகம் ஓடிக்கொண்டிருக்கிறது. தான் உண்டு, தன் வயிறும் உண்டு என்று சிலர் வாழுகிருர்கள். தான் உண்டு, தன் வேலே

உண்டு என்று சிலர் வாழுகிறார்கள். தன் மனைவி, தன் பிள்ளைகள், தன் வீடு என்று சிலர் வாழுகிறார்கள். என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்று சிலர் கேட்கிறார்கள்.

என் சகோதரனுக்காக நான் ஜெபிக்க வேண்டுமோ? என் சகோதரன்மேல் நான் அன்பு செலுத்தவேண்டுமோ? என் சகோதரனுக்காக நான் உத்தரவாதம் செய்ய வேண்டுமோ? என் சகோதரனுடைய ஆத்துமாவுக்கு நானா பொறுப்பு? நானா காவலாளி? என்று துணிகரமாய்ப் பேசுகிறார்கள். பாராமுகமாய் நடந்து கொள்கிறார்கள். கண்டும் காணாதவர்களாக கண்களை மூடிக்கொள்கிறார்கள்.

நான் காவலாளியோ, என்று கேட்பதுதான் இன்றைய காயீனின் ஆவி. இன்றைக்கும் இந்தக் காயீனின் ஆவி நமக்குள் கிரியை செய்கிறது அல்லவா? காயீனுக்குப் பிறகு ஏறக்குறைய 5000 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இன்றைக்கும் அந்தக் காயீனின் ஆவி, பொறுப்பற்ற ஆவி, சகோதர பாசமில்லாத ஆவி, நம்மில் அநேகருக்குள்ளே கிரியை செய்கிறதே.

யூதா அந்த ஆவியைக் கண்டுபிடித்து எழுதுகிறார்: "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப் பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப் போனார்கள்" (யூதா 1:11).

ஆம், இந்தக் காயீனின் ஆவியினால் பிடிக்கப்பட்டவர்களை வீடுகளில் பார்க்கிறோம், திருச்சபைகளில் பார்க்கிறோம்; அலுவலகத்திலும் தொழிற்சாலைகளிலும் பார்க்கிறோம்; தேசத்தில் ஏராளமாய் பார்க்கிறோம். சகோதரர்கள்மேல் பாசமற்ற, பொறுப்பற்ற இவர்கள் "நான் என் சகோதரனுக்கு காவலாளியோ?" என்று சொல்லிக் கை கழுவுகிறார்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இதே கேள்வியை ஒருவேளை நீங்கள் ஆண்டவரைப் பார்த்துக் கேட்டால், நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ என்று சொன்னால், கர்த்தர் உங்களுக்கு ஒரு பதிலை உடனே வைத்திருக்கிறார்.

அந்தப் பதில் என்ன? எசேக்கியேல் 3:17-ஐ வாசித்துப் பாருங்கள்.

''மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.''

''நான் காவலாளியோ?'' என்று நீ கேட்டால், கர்த்தர் உடனே, ''நீ காவலாளிதான்'' என்று சொல்லுகிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, ஆண்டவர் நம்மை காவலாளியாக வைத்திருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் ஒரு காவலாளி! கர்த்தர் அந்த வேலை உத்தரவை (Appointment Order) நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் எந்த வேலையைச் செய்தாலும் காவலாளிகள் என்பதை மறந்துபோய்விடக்கூடாது.

காவலாளி என்ற பொறுப்பை கொடுத்திருக்கிற ஆண்டவர் உத்தரவாதத்தை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அவர் நிச்சயமாகவே நம்மிடம் கணக்கு கேட்பார்.

நீ உன்னுடைய சகோதரனுக்குக் காவலாளி. உன்னுடைய சகோதரன் பாவத்திலே மரித்தால் அவனுடைய இரத்தப் பழியை உன்னிடத்தில் கேட்பேன். உன்னுடைய சகோதரனை நீ எச்சரியாமற்போனால் அந்தப் பொறுப்பை நான் உன்னிடத்தில் கேட்பேன். நீ ஒரே ஒரு சகோதரனுக்கு மாத்திரம் காவலாளி என்று எண்ணிவிடாதே. உன்னை நான் இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளியாக வைத்திருக்கிறேன் என்று வேதம் சொல்லுகிறது

காவலாளி என்ற பதத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். உலகப்பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும், ஆன்மீகப்பிரகாரமாகவும் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு அரசாங்கம் நல்லமுறையிலே செயல்படவேண்டுமென்றால் அதற்கு காவல்துறை மிகவும் அவசியம். போலீஸ் இலாக்காவை காவல்துறை என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். போலீஸ் வேன்மேல் காவல் என்று எழுதப்பட்டிருக்கிறது.

போலீஸ்காரர்களை அரசாங்கம் காவலர்கள் என்று அழைக்கிறது. காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் போன்றவை தேசத்தில் உள்நாட்டுக் கலவரங்கள் எழும் பாதபடி, ஜாதிவெறிகள், கொலைகள் நடவாதபடி தடுக்கின்றன, பாதுகாக்கின்றன.

அரசாங்கம் உள்நாட்டுக் கலவரங்களை மாத்திரமல்ல, வெளியிலிருந்து படையெடுத்து வருகிற எதிராளியின் படையெடுப்புகளையும் முறியடிப்பதற்காக இராணுவத்தை வைத்திருக்கிறது. யுத்த தளவாடங்களை வைத்திருக்கிறார்கள். விமானப் படைகளையும் கப்பற்படைகளையும் வைத்திருக்கிறார்கள்.

நவீன இயந்திரங்கள் வந்துவிட்ட இந்த நாட்களிலே, அரசாங்கம் காவலாளியைப் போல எல்லையெங்கிலும் ராடார்களை வைத்திருக்கிறார்கள்.

இந்த ராடார்கள் செய்கிற வேலை என்ன தெரியுமா? இவை இடைவிடாமல் மின்சாரக்கதிர்களை வானத்துக்கு நேராக அனுப்பிக்கொண்டே இருக்கின்றன. ஏதாவது ஒரு எதிரியின் விமானம் வந்தால் இந்த மின்சாரக்கதிர்கள் அந்த விமானத்தின்மேல் பட்டு பிரதிபலிக்கப்பட்டு, கீழே உள்ள இராணுவ நிலையத்துக்கு செய்தி கொடுக்கின்றன.

அந்த விமானம் எவ்வளவு உயரத்திலே, எவ்வளவு வேகத்திலே பறந்துகொண்டிருக்கிறது என்பதை உடனே

அந்தராடார் இயந்திரம் வெளிப்படுத்துகிறது. உடனே அதிலே பொருந்தப்பட்டிருக்கிற பெரிய பீரங்கி தானாகவே இயங்கி, மேலே பறக்கிற விமானத்தைச் சுட்டு விழ்த்துகிறது.

ராடார் எனப்படும் இந்த மின்சாரக் காவலாளிகள் மிக அருமையாய் இயங்கி தேசத்தைப் பாதுகாக்கின்றன.

எதிராளியின் விமானம் வருவதைப் போலத்தான் சாத்தான் அநேக வேளைகளிலே தேவபிள்ளைகளுடைய குடும்பங்களுக்கு விரோதமாக வானமண்டலத்திலிருந்து கடந்து வருகிறான். குடும்ப அமைதியையும், சந்தோஷத்தையும் குலைக்க வருகிறான். சபை விசுவாசிகளின் ஐக்கியத்தைக் கெடுத்துப்போட தந்திரமாய் வருகிறான்.

தேவனுடைய பிள்ளையே, நீ ஒரு காவலாளியாக முழங்காலில் நின்றால்தான் சாத்தானுடைய வல்லமைகளை உன்னால் முறியடிக்க முடியும். நம்முடைய ஜெபத்தின் சத்தமானது மின்சார அலைகளைப் பார்க்கிலும் வல்லமையுள்ளது.

ஜெபத்தால் சாத்தானின் தந்திரங்களை முறியடித்துப் போடுங்கள். அவன் தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே! ஊக்கமான ஜெபத்தின் மூலமாய் அவனுடைய ஆலோசனைகளை அபத்தமாக்குங்கள். அவனுடைய சதித்திட்டங்களை முறித்துப் போடுங்கள்.

சாத்தான் நம்முடைய குடும்பத்தைத் தாக்கின பிறகு, போராட்டங்கள் நம்மைச் சூழ்ந்து கொண்ட பிறகு நாம் ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே, நான் என் குடும்பத்துக்கு காவலாளியோ என்று கேட்க முடியாது. ஏனென்றால், ஆண்டவர் முன்னதாகவே வேதத்திலே உன் ஆத்துமாவுக்கும், உன் குடும்பத்துக்கும், உன் சபைக்கும், உன் தேசத்துக்கும் நீ காவலாளிதான் என்பதை தெளிவாய்ச் சொல்லியிருக்கிறாரே!

சிலர் நாம் கர்த்தரை மாத்திரம் பார்த்தால் போதும் என்று சொல்கிறார்கள். உண்மைதான், அதே நேரத்தில் நமக்கு ஒரு எதிரி இருக்கிறான் என்பதை மறந்துபோய் விடக்கூடாது.

அமெரிக்க சுவிசேஷகரான ஓரல் ராபர்ட்ஸ் அடிக்கடி நம்முடைய தேவன் நல்ல தேவன் என்றும், சாத்தான் ஒரு கெட்ட சாத்தான் என்றும் கூறுவார்.

சாத்தானின் தந்திரங்களை நாம் அறிந்துகொள்ளாமல் இருந்தால் நம்முடைய அறியாமையினால் அவனுடைய வலையில் நாம் விழுந்துவிடுவோம். சாத்தான் எப்போதும் நம்முடைய இரட்சிப்பை, தேவனோடு உள்ள நமது ஐக்கியத்தை, தெய்வீக சந்தோஷத்தை கெடுக்க முயற்சிக்கிறான்.

அவன் தனக்கு கொஞ்சக்காலம் மாத்திரமே உண்டு என்று அறிந்து கெர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாமென வகைதேடி சுற்றித் திரிகிறான்.

அவனுக்கு கடைசி காலம் ஆகிவிட்டது என்பது நன்றாகத் தெரியும். தேவ ஜனங்கள் உலகத்தின் முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். இவை கடைசி நாட்கள் என்றும், எழுப்புதலின் நாட்கள் என்றும் அறிந்திருக்கிறபடியினால் அவன் தன் முழு பெலத்தோடும், தன் முழு மூச்சோடும் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாகக் கிரியை செய்கிறான். அவனுடைய தந்திரங்களை முறியடிக்க நாம் ஜாக்கிரதையும் விழிப்பும் உள்ள காவலாளிகளாய் விளங்கவேண்டும்.

வேதம் நமக்கு திட்டமாய் சொல்கிறது. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோ

டும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு''

(எபே 6:11, 12).

ஆகவே, தேவபிள்ளையே, நீ காவலாளியாய் இருக்கிறாய். நாம் காவலாளிகளாய் இருக்கிறோம். நாம் தேவலால் நியமிக்கப்பட்ட காவலாளிகள் என்பதை மறந்து போய்விடக்கூடாது.

நாம் காவலாளிகள் என்று பார்த்தோம். எதற்கெல்லாம் நாம் காவலாளிகள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமா?

முதலாவதாக, நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு காவலாளிகள். இரண்டாவதாக, நம்முடைய பிள்ளைகளுக்கு நம்முடைய குடும்பத்துக்கு காவலாளிகள். மூன்றாவதாக, நம்முடைய சகோதரர்களுக்கு நாம் காவலாளிகள். நான்காவதாக, நம்முடைய சபைக்கு நாம் காவலாளிகள். ஐந்தாவது நம்முடைய தேசத்துக்கு நாம் காவலாளிகள். இவைகளைப்பற்றி தொடர்ந்து சிந்திப்போம்.

# ஆத்துமாவுக்குக் காவலாளிகள்!

''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள், அதினிடத்தின்று ஜீவஊற்று புறப்படும்''

(நீதி 4:23).

தேவபிள்ளையே, சகோதரனே, சகோதரியே, நீ எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்.

காரணம் என்னவென்றால், உன்னுடைய ஆத்தும மீட்பு விலையேறப்பெற்றதாய் இருக்கிறது. உன் இருதயத்திலே தேவன் தந்திருக்கிற இரட்சிப்பு விலையேறப்பெற்றதாய் இருக்கிறது. உன் ஆத்தும மீட்புக்காகவே அவர் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினார். ஆகவே எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். நீ உன் ஆத்துமாவின் காவலாளி என்பதை மறந்து போகாதே.

தேவபிள்ளையே, வெளியரங்மாக உன்னுடைய சரீரத்தை நீ காண்கிறாய். ஆனால் இந்த சரீரத்துக்கு உள்ளே, சரீரத்தைப்பார்க்கிலும் மிகுந்த விலைமதிப்புள்ள ஆத்துமா இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறாயா? சரீரம் அழிந்து போனாலும் ஆத்துமா என்றென்றைக்கும் ஜீவிக்கக்கூடியது என்பதை அறிந்திருக்கிறாயா?

நாம் மூன்று வேளை நம்முடைய சரீரத்தைப் போஷிக்கிறோம். சுவையான, ருசியான உணவுகளை உண்கிறோம். சரீரத்தைப் பேணும்படி பவுடர் பூசுகிறோம், எண்ணெய் தேய்க்கிறோம், முடியைச் சீவுகிறோம், விதவிதமான வாசனைத் திரவியங்களையெல்லாம் பயன்படுத்துகிறோம்.

மட்டுமல்ல, சரீரத்தில் ஒரு சிறு வியாதி வந்துவிட்டால், உடனடியாக டாக்டரிடம் போகிறோம். அறுவைச் சிகிச்சை பண்ணவேண்டியது இருக்குமோ, ஊசி போட

வேண்டியது இருக்குமோ என்றெல்லாம் நாம் சரீரத்தின் மேல் கவனமாயிருக்கிறோம். சரீரமேன்மைகளுக்காக எவ்வளவோ செலவளிக்கிறோம்.

தேவபிள்ளையே, சரீரத்தைப்பார்க்கிலும் உன் ஆத்துமா விலையேறப்பெற்றது என்பதை உணர்ந்திருக்கிறாயா? இந்தச் சரீரம் கொஞ்சக்காலம்தான் பூமியிலே வாழும். ஒரு மனுஷன் மிஞ்சிப்போனால் 70 வருஷங்கள் அல்லது 80 வருஷங்கள் இந்த பூமியில் வாழக்கூடும். 100 வருஷம் என்றே வைத்துக்கொள்வோமே. அவ்வளவுதான் இந்த சரீரத்தின் மதிப்பு! அதற்குப் பிறகு இந்த சரீரம் அழுகும், குளுகுளுக்கும், நாறிக்கீழே விழும். ஒன்றும் இல்லாமல் போய் விடும்.

மனுஷன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டபடியினால் மண்ணுக்கே திரும்புவான். மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்கு சாம்பலாகவுமே நாம் இந்த சரீரத்தை ஒப்புக் கொடுக்கிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

கொஞ்சக்காலம் இருக்கிற இந்த சரீரத்தை நாம் இவ்வளவு மேன்மைப்படுத்துகிறோம், இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம், இவ்வளவு கண்ணுங்கருத்துமாய் பேணுகிறோம்.

ஆனால் நமக்கு உள்ளே இருக்கிற ஆத்துமா 100 ஆண்டுகள் அல்ல, கோடானு கோடி ஆண்டுகளாக அழியாத ஆத்துமாவாய், நித்திய நித்திய காலமாய் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவேதான் உன்னுடைய சரீரத்தைப் பார்க்கிலும் உன்னுடைய ஆத்துமா விசேஷமானது என்று ஆண்டவர் உணர்த்தினார்.

இயேசு சொன்ன உவமையை கவனித்துப் பாருங்கள். ஒரு ஐசுவரியவான் இருந்தான். அவனுடைய வயல்நிலங்கள் எல்லாம் அருமையாய் விளைந்தன, களஞ்சியங்களையெல்லாம் இடித்து அவன் பெரிதாகக் கட்டினான். பல ஆண்டுகளுக்கான உணவுப் பொருட்களை சம்பாதித்தான்.

அவன் தன் உள்ளத்தில் பேசிக்கொண்டு, பல ஆண்டு சுருக்கு இலைகள் போதும், நான் புசித்துக் குடித்து திருப்தியாவேன் என்று சொன்னான்.

கர்த்தர் அவனுக்குக் கொடுத்த மறுமொழி என்ன தெரியுமா? மதிகேடனே, இந்த இரவு உன் ஆத்துமா உன்னைவிட்டு எடுபடும் என்றால் நீ சேகரித்த இலைகள் எல்லாம் யாருடையதாகும்? உன் சரீரத்துக்காக எவ்வளவு பாடுபட்டாய்? களஞ்சியங்களையெல்லாம் இடித்து பெரிதாய்க் கட்டினாய், தானியங்களையெல்லாம் மூட்டை மூட்டையாய்ச் சேர்த்தாய். நல்லதுதான்.

ஆனால் உன் ஆத்துமாவின் நிலைமை என்ன? இன்றைக்கு உன் சரீரத்திலிருந்து உன் ஆத்துமா பிரிக்கப்படும் என்றால் நித்தியத்தை உன் ஆத்துமா எங்கே கழிக்கும்?

ஆத்துமாவைக் குறித்து அக்கறையில்லாத ஒவ்வொருவரையும் பார்த்து கர்த்தர் மதிகேடனே என்று அழைக்கிறார். அவன் ஒரு பெரிய ஐசுவரியவான்தான், செல்வந்தன்தான். அவனுடைய பணத்தையோ ஐசுவரியத்தையோ குறித்து கர்த்தர் அக்கறைகொள்ளாமல் அவனை மதிகேடனே என்று அழைத்தார். ஒருவன் ஆத்துமாவுக்கு காவலாளியாய் இல்லாமல் இருப்பான் என்றால் அவன் நிச்சயமாகவே மதிகேடன்தான்.

ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், முழு பெலத்தோடும் ஓடிஓடி சம்பாதித்தாலும், திரளான சொத்துக்கள் வைத்திருந்தாலும் அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்திவிட்டால் அவனுக்கு லாபம் என்ன?

ஆத்துமா நஷ்டப்படுவது எவ்வளவு பெரிய நஷ்டம்! எவ்வளவு பெரிய பரிதாபம்!

K. DEVI...
M... CHILDREN,

HOSPITAL QUARTERS,
TIRUNELVELI-627006.

தொண்ணூறு வயதுவரை உல்லாசமாய் வாழ்ந்து, பாவத்திலே ஜீவித்து, பாவத்திலே மரிப்பதால் என்ன பிரயோஜனம்? அப்படிப்பட்டவர்கள் பிறந்ததைப் பார்க்கிலும் பிறவாதிருப்பதே மேலானது.

தேவபிள்ளையே, சற்று சிந்தித்துப் பார். ஆத்தும இரட்சிப்பு எவ்வளவு அருமையானது! தேவன் தன் ஆத்துமாவில் தருகிற இரட்சிப்பின் கெம்பீர சத்தம் எத்தனை மகிழ்ச்சியானது! பாவ மன்னிப்பும் இரட்சிப்பும் எவ்வளவு பாக்கியமான அனுபவம் என்பதை நாம் மறந்து போகக்கூடாது! எல்லாக் காவலோடும் உன் ஆத்துமாவைக் காத்துக்கொள்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய ஆத்துமாவை பாதுகாத்து உன்னை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடு. 121-ம் சங்கீதத்தில் கர்த்தர் உன் ஆத்துமாவை காக்கிறதைக் குறித்த வாக்குத்தத்தத்தை உனக்கு கொடுக்கிறார்.

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

நீ உன் ஆத்துமாவை காக்கவேண்டுமென்று பிரயாசப்படும்போது, நீ உன் ஆத்துமாவின் முடிவைக் குறித்து அக்கறையுள்ளவனாய் இருக்கும்போது, கர்த்தர் உனக்கு வாக்குத்தத்தம் செய்து திட்டமாய் சொல்கிறார். கர்த்தர் உன் ஆத்துமாவைக் காப்பார். உன்னை எல்லாத்தீமைக்கும் விலக்கிக் காப்பார்.

தேவபிள்ளையே, உன் ஆத்துமாவில் அவர் அக்கறை காண்பித்ததால் அல்லவா உனக்காக பரலோகத்தின் மேன்மையை விட்டு பூமியில் இறங்கி வந்தார். உன் ஆத்துமாவை இரட்சிப்பதற்காக அல்லவா கல்லுகளிலும் முள்ளுகளிலும் உன்னை தேடி நடந்து வந்தார்.

உன் ஆத்துமாவின் விலைமதிப்பை அறிந்த தேவன் கெத்செமனே தோட்டத்திலே உனக்காக ஆத்தும வியா

குலம் அடைந்தார். அவர் தமது ஆத்துமாவிலே கலங்கினார். அவர் தமது ஆத்துமாவில் துக்கம் கொண்டிருந்தார்.

உன்னுடைய ஆத்துமாவுக்கு பதில் அவர் தன்னுடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்ற வேண்டியதிருந்ததினால் அவருடைய ஆத்துமா மரணத்திற்கு ஏதுவாய் துக்கம் கொண்டிருந்தது.

உன் ஆத்துமாவின் வியாகுலங்களையும் உன் ஒவ்வொரு பாடுகளையும் அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தார்.

அவர் சிலுவையில் தன்னுடைய சரீரத்தின் ஜீவனைக் கொடுப்பதற்கு முன்பாகவே அவர் தன் ஆத்துமாவில் மரணத்தை ருசிபார்த்தார். கெத்செமனே தோட்டத்திலே அவருடைய ஆத்துமாவில் மரணத்தை ருசி பார்த்தார்.

ஏசாயா 53-ம் அதிகாரத்தில் கடைசி வசனத்தை வாசித்துப் பாருங்கள். ''அவர் தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்'' என்று வேதம் சொல்லுகிறது.

அந்த ஆத்தும வியாகுலமும், ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிக்கொடுப்பதும் எத்தனை வேதனையாய் இருந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

பெரிய வெள்ளிக்கிழமையிலே எல்லோரும் ஆண்டவருடைய சரீர பாடுகளைக் குறித்துப் பேசுவார்கள். அவர் சிலுவையிலே மொழிந்த ஏழு மொழிகளைக் குறித்து பேசுவார்கள். அவர் முள்முடி சூட்டப்பட்டதையும் ஆணிகள் கடாவுண்டதையும் தியானிப்பார்கள். ஆனால் நம்முடைய ஆத்துமாவை பாதுகாக்கும்படி அவருடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றியதை தியானிக்கிறவர்கள் யார்?

நம்முடைய ஆத்துமாவுக்காக தன்னுடைய ஆத்துமாவையும் விலைக்கிரயமாய் கொடுத்தாரே. நம் ஆத்துமாவை பாதாளத்திலிருந்து மீட்கும்படி, நம்முடைய ஆத்துமா நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி, தன்னு

டைய ஆத்துமாவை அவர் மரணத்தில் ஊற்றிக் கொடுத்தாரே.

வேதம் சொல்லுகிறது. ''அவருடைய நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்'' (உன் 1:3). கெத்செமனே தோட்டத்திலே, கல்வாரியிலே, அவர் தன் ஆத்துமாவை ஊற்றி ஜெபித்தார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, அவ்வளவு விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி தமது ஆத்துமாவை ஊற்றிக்கொடுத்த அந்த தியாகத்தை சிந்தித்துப் பார். உன் ஆத்துமாவின் விலைமதிப்பை கணக்கிட்டுப் பார். எல்லாக் காவலோடும் உன் ஆத்துமாவைக் காத்துக் கொள்வாயாக!

உன் ஆத்துமாவை பாவம் கறைப்படுத்தும்போது, உன் ஆத்துமா தேவனுடைய பிரசன்னத்தை உணர முடியாமல் தவிக்கும்போது, உன் ஆத்துமாவிலே சந்தோஷம் இல்லாதபோது உடனடியாக உன்னை நீயே ஆராய்ந்து பார். தேவ சமுகத்திற்கு ஓடிப்போய் உன் ஆத்துமாவிலே சந்தோஷம் இல்லாமல் போனதிற்கு காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்.

பாவம் பிரவேசித்து விட்டதோ அக்கிரமங்கள் குடி கொண்டதோ என்று உன்னை நீயே ஆராய்ந்து பார்ப்பாயாக. நம்மை நாமே ஆராய்ந்து நிதானிப்போமானால் நியாயம் தீர்க்கப்படோம். எல்லாக் காவலோடும் உன் ஆத்துமாவை காத்துக்கொள்.

ஆத்துமாவை நீ காத்துக்கொள்வது மாத்திரமல்ல, அதை நீ போஷிக்கவும் வேண்டும். சரீரத்திற்கு மூன்று வேளை உணவு உண்கிறோம். ஆத்துமா வாழ வேண்டுமென்றால் ஆவிக்குரிய உணவு நமக்கு தேவையல்லவா?

வேதம் சொல்லுகிறது: ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற

ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' (மத் 4:4). ஆம், ஆத்துமாவிற்கு உணவாக வேத வசனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேத வசனங்கள் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த மன்னா.

இஸ்ரவேல் ஜனங்களை அன்றைக்கு ஆண்டவர் தேவ தூதர்களின் உணவான மன்னாவினால் போஷித்தார். இன்றைக்கு உன் ஆத்துமாவை ஜீவ அப்பமாகிய வேதவசனங்களின் மூலமாக போஷிக்கிறார். நாம் நம் ஆத்துமாவுக்கு காவலாளிகள் என்பதை மறந்துபோக வேண்டாம். ஆத்துமாவை போஷிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

# எண்ணங்களுக்கு காவலாளிகள்!

நம் ஆத்துமாவைக் காக்க வேண்டுமென்றால் முதலாவது நாம் ஆத்துமாவிலே வருகிற சிந்தனைகளைக் காக்க வேண்டும். சிந்தனைகளுக்கு நாம் காவல் காக்காமற் போனால் ஆத்துமாவை காக்க முடியாது. நம் எண்ணங்களுக்கு நாம் காவல் வைக்க வேண்டும்.

தங்கள் ஆத்துமாவுக்கு காவலாளிகளாய் இராதவர்கள் தங்கள் சிந்தனைகளினாலே வீணராய்ப் போகிறார்கள் என்று ரோமருக்கு எழுதின நிருபத்தில் முதலாம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். சிந்தனையிலே அவர்கள் வீணராய்ப் போகிறார்கள்.

பாவமானது முதலாவது சிந்தனையில்தான் தோன்றுகிறது. இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கிறது. பாவம் மரணத்தை பிறப்பிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேதம் கூறுகிறதே.

ஒரு மனுஷனுடைய சிந்தனையிலே வாழ்க்கையிலே ஜெயமில்லாமற்போனால் அவனால் பரிசுத்தத்தை காத்துக் கொள்ள முடியாது. ஒரு மனுஷன் தன் எண்ணங்களிலே, சிந்தனைகளிலே, சரியான ஜெயமெடுக்காவிட்டால் அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தி விடுவான். இந்த ரகசியம் அநேகம் பேருக்கு தெரிகிறதில்லை.

ஒரு மனுஷனுடைய ஜெய ஜீவியமும் பரிசுத்த ஜீவியமும் வெளிப்பிரகாரமான வாழ்க்கையில் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவனுடைய சிந்தனைகளில் ஆரம்பித்துவிடுகின்றன. சாத்தான் ஒரு மனுஷனை தாக்குகிறபோர்க்களம் அவனுடைய எண்ணங்களும் சிந்தனைகளும்தான்.

சாத்தான் ஒரு மனுஷனை ஜெயிக்க வேண்டுமென்று விரும்பினால் முதலாவது அவன் எண்ணங்களில் போராடு

கிறான். எண்ணங்களுக்குள்ளே தோல்வியின் விதைகளை விதைக்கிறான். பயத்தின் விதைகளை விதைக்கிறான். பாவ சுபாவ விதைகளை விதைக்கிறான்.

அந்த விதைகள் தன்னையறியாமல் அவனுக்குள்ளேயே வளருகின்றன. வளர்ந்து அந்த விதைகள் முளைக்க ஆரம்பிக்கின்றன. மாத்திரமல்ல, அந்த விதைகள் ஆத்துமாவை தூர்த்துப்போடுகின்றன.

ஒரு கிணறு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த கிணற்றுக்கு மேலே ஏராளமான பறவைகள் பறந்து போகலாம். இந்தக் கிணறுதான் நம்முடைய ஆத்துமா என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்தக் கிணற்றின்மேல் பறவை பறக்கிறதுபோல நம் ஆத்துமாவிலே ஏராளமான யோசனைகள், சிந்தனைகள், நினைவுகள், நாம் சும்மா இருந்தாலும், உட்கார்ந்திருந்தாலும், படுத்திருந்தாலும் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

கிணற்றின் மேலாய் பறக்கிற பறவைகள் சில நேரங்களில் அந்த கிணற்றின்மேல் வந்து அமருகிறன. அமருகிற பறவைகள் அங்கே எச்சமிடுகின்றன. அந்த எச்சத்தில் சில விதைகள் காணப்படுகிறது. சில வேளைகளில் அது ஒரு ஆல விதையாகவும் இருக்கக்கூடும்.

அந்த ஆல விதைகள் கொஞ்ச நாட்களுக்குள் முளைத்தெழும்ப ஆரம்பிக்கிறது. சிறிய செடியாக வளருகிறது. சிறிய செடிதானே என்று கவனிக்காமல் நாம் விட்டுவிட்டு போனால், அது குறித்து சரியாக நாம் காவல் செய்யாமல் போனால், அது வளர்ந்து பெரிய மரமாகி கிணற்றையே தூர்த்துப் போட்டு விடுகிறது.

அதுபோலவே, நம் ஆத்துமாவுக்கு மேலாய் பறக்கிற எண்ணங்களில் சில நம்முடைய உள்ளத்தில் வேரூன்றுகிறது. அதைக்குறித்து அதிகமாய் சிந்திக்க தோன்றுகிறது. அந்த சிந்தனைகள் போகப்போக செயலாக மாறு

கின்றன. அந்த செயலிலே பாவம் பிரவேசித்து ஆத்துமாவை உடைத்து நொறுக்கிப் போடுகிறது.

சிறிய ஆல விதை வளர்ந்து பெரிய கிணற்றை தூர்த்துப் போட்டதைபோல சிறிய சிந்தனைகள் உள்ளத்தில் வேரூன்றி ஆத்துமாவைத் தூர்த்து போடுகிறது

ஆகவேதான் அப்போஸ்தலனுகிய பவுல், ''நான் எல்லா எண்ணங்களையும்கூட கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக சிறைப்படுத்துகிறேன்'' என்று குறிப்பிடுகிருர். அந்த வசனம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள்.

''எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்''

(II கொரி 10:4,5).

தேவபிள்ளையே, எந்த எண்ணத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் கீழ்ப்படிய சிறைப்படுத்து. எண்ணங்களுக்கு காவலாளியாய் இரு. எண்ணங்களிலே வீணராய்ப் போய்விடாதே.

அநேகர் கற்பனைகளிலே வாழ்ந்துகொண்டிருப்பார்கள். மனக்கோட்டை கட்டி கட்டி நிறைவேருமல் தவித்துக் கொண்டிருப்பார்கள். தேவனுடைய பிள்ளைகள் எண்ணங்களை சிறைப்படுத்தும் ரகசியத்தை அறிந்திருக்க வேண்டும்

சாத்தான் எண்ணங்களிலே தன து விதைகளை விதைக்கிறது மாத்திரமல்ல, சொப்பனங்களிலும் ஊடுருவி தன் விதைகளை விதைக்கிருன்.

எனக்கு இரவிலே தூக்கம் எல்லாம் கெட்ட கனுக்களாகவே வரும். சிலருக்கு மாடு துரத்துகிறதைப் போல

பாம்பு துரத்துகிறதைப் போல சொப்பனம் கண்டு பயந்து எழும்புவார்கள். அந்த நாள் முழுவதும் இனம்புரியாத பயம் அவர்களை ஆட்கொள்ளும்.

இன்னும் சிலருக்கு சந்தேக விதைகளை விதைக்கிறான். கணவன்மேல் மனைவிக்கு சந்தேகம். மனைவிமேல் கணவனுக்கு சந்தேகம். சொப்பனம் கண்டு காலையில் எழும்பும் போது அவர்கள் பாம்பும் கீரியும்போல சண்டை போட்டுக்கொள்வார்கள். குடும்பம் உடைந்து போகிறதைப்போல அவர்களுக்குள்ளே மனஸ்தாபம் ஏற்பட்டு விடும். காரணம் இவர்கள் சிந்தனைகளுக்கு காவலாளிகளாக இல்லாமற்போனதுதான்.

கிறிஸ்து அதைக் குறித்து ஒரு உவமையைச் சொன்னார்: ''பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும்காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான்'' (மத் 13:24-28).

வேதம் சொல்லுகிறது, கர்த்தர் நல்ல எண்ணங்களை கோதுமை மணி போல விதைக்கிறார். வேத வசனங்களை விதைக்கிறார். தமது அருமையான ஆலோசனைகளை விதைக்கிறார். ஆனால் தூங்கும்போது அவர்களிடத்திலே சாத்தான் வந்து களைகளை விதைத்துவிட்டுப் போய் விடுகிறான்.

களைகளை விதைக்கிறதற்கு சாத்தானுக்கு அருமையான நேரம் இரவு நேரம்தான். இரவு நேரத்திலே சொப்பனங்கள் மூலமாக, கனவுகளின் மூலமாக, சிந்தனைகளில் ஊடுருவி விடுகிறான்.

எண்ணங்களிலே சாத்தான் ஊடுருவாதபடி அவனுக்கு காவல் வைப்பது எப்படி? ஆம், அந்த வேளையில் நம்முடைய மனுஷீக முயற்சியால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. தூக்க வேளையில் மெய் மறந்து நாம் தூங்கிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய சுய பெலமும் அந்த வேளையில் வேலை செய்யாது. நம்முடைய அறிவுத்திறனும் வேலை செய்யாது. நம்முடைய சுய பிரயாசத்தினால் நாம் அதற்கு காவலாளியாய் இருக்க முடியாது.

அந்த வேளையில் காவலாளிகளை நாம் நியமித்தே தீர வேண்டும். அந்த வேளைக்கு காவலாளியாய் வருவதற்கு பரிசுத்த ஆவியானவர் ஆவலோடுகூட இருக்கிறார்.

அதை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் இரவிலே தூக்கம் வருகிற வரையிலும் ஆவியிலே நிறைந்து ஜெபித்துக்கொண்டே படுத்தால், நீங்கள் எந்த இடத்தில் ஜெபத்தை நிறுத்தினீர்களோ அந்த இடத்திலிருந்து ஆவியானவர் உங்களுக்குள்ளிருந்து ஜெபிக்க ஆரம்பித்து விடுவார்.

நீங்கள் இரவில் திடீரென்று விழித்தால் உங்களுடைய உள்ளத்தில் ஜெபம் ஓடிக்கொண்டிருக்கிறதை காணலாம். அதிகாலையில் விழித்தாலும் உங்களுக்குள்ளிருந்து ஆவியானவர் ஜெபித்துக்கொண்டிருக்கிறதை நீங்கள் உணர முடியும். ஆவியானவர் நமக்குள் இருந்து ஜெபத்தை ஏறெடுத்துக்கொண்டிருக்கிறபடியினாலே சாத்தானால் ஒரு போதும் நம்முடைய எண்ணங்களில் ஊடுருவவே முடியாது.

ரோமர் 8:26-ம் வசனத்தை நன்றாக நினைவில் நிறுத்திக்கொள்ளுங்கள். உங்களுடைய எண்ணங்களுக்கு காவலாளியாய் நிற்பதற்கு ஆவியானவர் எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறார் என்பதை மறந்து போக வேண்டாம். வேதம் சொல்லுகிறது, "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்

கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்'' (ரோமர் 8:26).

நீங்கள் முயற்சி செய்து பாருங்கள். இரவிலே தூங்குகிறதற்கு முன்பாக ஒரு பாட்டை கருத்தோடும் ஆவியோடும் பாடிக்கொண்டு அப்படியே தூங்குங்கள். அந்த இரவெல்லாம் அந்தப் பாடல் உங்களுடைய உள்ளத்தில் ஓடிக்கொண்டே இருக்கும். அந்தப் பாடல் கர்த்தர்மேல் உள்ள அன்பையும் ஆண்டவருடைய பிரசன்னத்தையும் உங்களுக்குள்ளே கொண்டுவந்துகொண்டேயிருக்கும். அப்போது சாத்தானால் எண்ணங்களில் ஊடுருவவே முடியாது.

அதே வழியை தாவீது ராஜாவும் பின்பற்றினார். அவர் என்ன செய்தாராம் தெரியுமா? கர்த்தருடைய வேதத்தின் வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு, தியானித்துக்கொண்டே தூங்குவது உண்டு. ஆகவே சாத்தானால் அவருடைய எண்ணங்களுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. தாவீது தன் அனுபவத்தை சொல்கிறார்: ''நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்'' (சங் 119:11).

தேவபிள்ளையே, உன் சிந்தனைகளுக்கு நீ காவல் வைத்தால் உன் ஆத்துமாவை காத்துக்கொள்வாய். எல்லாக் காவலோடும் உன் ஆத்துமாவைக் காத்துக்கொள்.

அத்தியாயம் 4

# கண்களுக்குக் காவல்!

கண்களானது இருதயத்தின் வாசல் என்று அழைக்கப்படுகிறது. ஒரு மனுஷனுடைய கண்களிலிருந்தே அவன் எப்படிப்பட்ட சுபாவம் உடையவன் என்பதை போலீசார் கண்டுபிடித்து விடுகிறார்கள். கண்கள் இருதயத்தின் வாசலாய் இருப்பதினால் இருதயத்திலுள்ள எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாவற்றையும் அவை வெளிப்படுத்துகின்றன.

மட்டுமல்ல, கண்கள் மனுஷனுடைய உள்ளத்திரையிலே பல காட்சிகளைப் பதுக்கிவைக்கிறது. ஒருவனுடைய கண்கள் இச்சையோடு பார்க்கும் என்றால், அவனுடைய இருதயத்தின் ஆழத்தில் அந்த இச்சை பாவமாக கர்ப்பம் தரிக்கிறது. அந்த பாவ இச்சைகளை நிறைவேற்ற அவனுடைய கால்கள் தீவிரிக்கின்றன! முடிவில் அவன் பாவத்தில் விழுந்து விடுகிறான். ஆகவே கண்களுக்கு காவல் வைக்க வேண்டியது அவசியம்.

வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரம் 18-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். கண்களுக்கு காவல் வைக்க வேண்டியதை கர்த்தர் அங்கே வலியுறுத்துகிறார்.

"நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி 3:18).

கண்களுக்கு கலிக்கம் போடவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. கலிக்கம் என்றால் என்ன?

நீங்கள் குதிரைவண்டியை இழுத்துச் செல்கிற குதிரையைப் பாருங்கள். அதனுடைய கண்களின் இரண்டு பகுதிகளிலும் தகரம் போன்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். இது குதிரை தனது பக்கங்களிலே பார்க்காதபடிக்கு தடுத்து, அதனுடைய பார்வையை முன்னால் மட்டும் பார்க்கும்படி ஒருமுகப்படுத்துகிறது. அதற்கு பெயர்தான் கலிக்கம். கலிக்கம் தான் குதிரையை நேரான பாதையிலே ஓடச் செய்கிறது. கலிக்கம் கண்களின் பார்வை பல இடங்களில் சிதறிவிடாதபடி தடுக்கிறது.

வேதம் சொல்லுகிறது, ''உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது'' (நீதி 4:25)

இயேசு சொன்னார்: ''கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும், உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்'' (மத் 6:22, 23).

கண்கள்தான் மனுஷனுடைய வாழ்க்கைக்கே விளக்காய் இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. நாம் கண்களுக்கு காவல் வைக்க வேண்டியது எவ்வளவு அவசியம்!

கர்த்தர் கண்களை சிருஷ்டிக்கும்போது அதற்கு எவ்வளவு பாதுகாப்பு கொடுத்திருக்கிறார் என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். கண்களானது சரியாய் மண்டை ஓட்டிலுள்ள இரண்டு ஓட்டுக்குள் பாதுகாப்பாய் அமைந்திருக்கிறது. நெற்றிப்பாகமும், கன்னங்களும் அதற்கு காவலாளிகளாய் நிற்கின்றன.

மட்டுமல்ல, கண்கள் பாதுகாப்பாய் இருப்பதற்காக கண்களுக்கு மேலே இமையையே வைத்திருக்கிறார். ஒரு சிறு தூசி வரும் என்றாலும் உடனே அந்த

மை மூடி கண்களை பாதுகாத்துக் கொள்கிறது. இரவிலே ங்கும்போது இந்த இமைகள் மூடி கண்களை பாதுகாக் ன்றன.

மாத்திரமல்ல, கண்களுக்கு மேலே புருவத்தில் கர்த்தர் ராளமான முடியை வைத்து நெற்றியிலுள்ள வியர்வை ள்களுக்குள் வந்துவிடாதபடி தடுத்து அணை கட்டுகிறார். ட்டுமல்ல, கண்களுக்குள்ளே கண்ணீரை வைத்து ண்களை சுத்தப்படுத்துகிறார். கண்களிலே ஏதாவது பொருள் விழுந்தால் உடனே அது கண்களை உறுத்துகிறது, ண்ணீரை வரவழைக்கிறது. கொஞ்சநேரத்தில் அந்தப் பொருள் கண்ணீரின் வழியாக கரைந்து வெளியே ந்துவிடுகிறது.

கண்கள் எவ்வளவு முக்கியம்! கண்களில்லாத குருடரைப் பார்க்கும்போது நம்முடைய மனம் உருகுகிறது. அவன் வாழ்நாள் எல்லாம் இருள் அல்லவா? கண்கள் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம் உண்டு?

அதுபோலவே, ஒரு மனுஷன் கண்களின் இச்சை ளிலே விழுவான் என்றால் அவனுடைய ஆத்துமா இரு டைந்து போகும். கண்கள் சரீரத்தின் விளக்கு என்று வேதம் சொல்லுகிறது. அந்த விளக்கு அணைந்துவிட்டால் எவ்வளவு பெரிய நஷ்டம்!

கண்களை கண்ணீர் கழுவி சுத்திகரிப்பதைப் போல, ன் கண்களில் பாவம் விழுந்துவிட்டால் இயேசுவின் இரத்தத்தை ஊற்றி அதைச் சுத்திகரிப்பாயாக. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி மனுஷனை சுத்திகரிக்கும்.

சிந்தித்துப் பாருங்கள். ஒரு மனுஷனுடைய பரிசுத்த வாழ்க்கைக்கு விரோதமாக மூன்று காரியங்கள் இடை விடாமல் போராடுகின்றன. 1. கண்களின் இச்சை 2. மாம்சத்தின் இச்சை. 3. ஜீவனத்தின் பெருமை. ஒரு மனுஷன் தன் கண்களுக்கு காவல் வைக்காமற்போனால்

அல்லது அதைக்குறித்து 'அவன் ஏனோதானோ என்று வாழ்ந்தான் என்றால், அந்தக் கண்கள் அவன் ஆத்துமாவை கறைப்படுத்தும் என்பதை நாம் மறந்துபோய்விடக் கூடாது.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவானாகிய யோபு தன் கண்களை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்தான். தன் கண்களினாலே தன் மீட்பரை கண்குளிரக் காணவேண்டு மென்று தீர்மானித்தான்.

அவன் தன் விசுவாச அறிக்கையில் எழுதுகிறான்: ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்'' என்று குறிப்பிடுகிறான் (யோபு 19:25-27).

என் கண்களே அவரைக் காணும். அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும். எத்தனை பெரிய நம்பிக்கை அது!

தன் கண்களால் கர்த்தரைக் காணவேண்டுமென்று விரும்பிய அந்த பக்தன் தன் கண்களுக்கு காவல் வைத்தான். கண்களில் பாவம் பிரவேசிக்காதபடி தன்னை பாதுகாத்துக்கொண்டான். கண்களிலே பாவமாகிய ஒரு முள் குத்திவிட்டால் கண் கெட்டுப்போகும்.

ஒரு பெரிய வெளவால் இறகில் ஒரு சிறிய ஓட்டை போட்டுப் பாருங்கள், அந்த வெளவாலினால் பறக்க இயலாது.

கண்களிலே பாவம் ஓட்டை போட்டுவிட்டால் மீட்பரை வருகையிலே சந்திப்பது எப்படி? ஆகவே யோபு பக்தன் தன் கண்களுக்கு காவல் வைக்க தீர்மானித்தான்.

ஆகவேதான் அவன் யோபு 31:11-ல் ''என் கண்ணோடு உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகைன்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?'' என்று எழுதுருன்

என் கண்களோடு நான் ஒரு உடன்படிக்கை பண்ணியிக்கிறேன். என் கண்களுக்கு கலிக்கம் போட்டிருக்கிறேன். ன் கண்கள் என் சரீரத்தின் விளக்காய் இருக்கிறது. என் கண்களின் இச்சையிலே நான் விழுந்துவிடக்கூடாது என்று எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவனாய் இருந்தான். தேவபிள்ளையே, வருகையின் நாட்கள் சமீபித்திருக்கிற நாட்களிலே நானும் நீயும் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்!

பூமியிலே பாவம் முதலாவது பிரவேசித்ததற்கு மூலகாரணம் இந்த கண்களின் இச்சைதான்.

ஏவாள் கண்களின் இச்சையோடுகூட விலக்கப்பட்ட கனியைப் பார்த்தாள். நான் புசிக்கவில்லையே, கண்களினாலேதானே பார்க்கிறேன். அதைப்பற்றி பரவாயில்லை என்று அவள் ஒருவேளை எண்ணியிருந்திருக்கக்கூடும்.

அவள் பார்த்தாள், பார்த்துக்கொண்டேயிருந்தாள். பார்க்கப் பார்க்க அவளுடைய சிந்தனையும் செயல்படத் தொடங்கினது. அவள் பார்க்கும்போது பல காரியங்களைக் கண்டுபிடித்தாளாம் அந்தக் கனி புசிப்புக்கு நல்லது, பார்வைக்கு இன்பமானது, புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கது என்று அவள் கண்டாளாம் (ஆதி 3:6).

பார்க்கப் பார்க்க அவளுடைய கற்பனை சிறகடித்துப் பறந்தது; சாப்பிடும் முன்னாலே அது புசிப்பதற்கு நல்லது என்று கண்டுவிட்டாள் பார்வையிலேயே அந்த பழத்தின் ருசியை அவள் அனுபவித்துவிட்டாள். கண்களின் இச்சையிலே அவள் விழுந்தாள்.

# ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய [illegible] [illegible] ஆத்தும [illegible] [illegible] ஆவிக்குரிய நூல்கள் [illegible].

ஏறக்குறைய 30 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. ஜெ. சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பல [illegible] ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1983 ஆண்டு தீவிரமாக இறங்கினார். [illegible] மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் ஊழியக்காரர்.

புத்தக ஊழியத்தை ஜெபத்துடன் தாங்குங்கள். அநேக ஆவிக்குரிய புத்தகங்களை வெளியிட ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.


புத்தகங்கள் கிடைக்கும் இடம்

**ஜெ. சாம் ஜெபத்துரை M.A.**

50, ரெயில்வே பார்டர் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை - 600 024